**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.35/2025**
**Prosecution Witness – PW.2**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. வினோத் குமார் |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 21.07.2026.
(A1, A2, A3 and A5 are present. A4 absent.)
முதல் விசாரணை–

நான் மண்டைக்காடு காரவிளையில் குடியிருந்து வருகிறேன். நான் சிறு கடை வைத்து தொழில் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. சம்பவம் நடந்த இடத்தின் பக்கம் எனது கடை அமைந்துள்ளது. எனக்கு என்ன சம்பவம் என்றும் தெரியாது. போலீஸ் என்னை விசாரித்தார்கள். எனது பெயரை கேட்டார்கள். நான் தெரியாது என்று சொன்னேன்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

குறுக்கு விசாரணை ( அரசு தரப்பில்)

19.01.2021 ம் தேதி இரவு சுமார் 9.30 மணியளவில் நான் எனது கடையின் முன் நின்று கொண்டிருக்கும் பொழுது எனது கடையில் இருந்து கிழக்கு பக்கம் உள்ள இராஜ் திலக் என்பவரின் தென்னந்தோப்பு பக்கம் மெயின் ரோட்டில் ஓரமாக TN 75 H 1526 என்ற எண் கொண்ட இருச்சக்கர வாகனத்தில் வந்த நபர் செல் போனில் பேசிக் கொண்டிருந்தார் என்றும், அப்போது திடீரென TN 75 AP 0136 என்ற பதிவெண் கொண்ட இருச்சக்கர வாகனத்தில் வந்த 3 நபரும் TN 75 C 1235 என்ற ஆட்டோவில் வந்த இருவருமாக சேர்த்து 5 பேர்களும் செல்போனில் பேசிக் கொண்டிருந்த நபரை பிடித்து இழுத்து அந்த ஆட்டோவில் வலுக்கட்டாயமாக ஏற்றிய போது அவர் சத்தம் போடவே. அந்த சம்பவத்தை

பார்த்து நான் அருகில் சென்ற போது அந்த 5 நபர்களும் வடக்கு பார்த்த ரோடு வழியாக வேகமாக சென்று விட்டார்கள் என்றும் அதன் பிறகு பாதிக்கப்பட்ட நபர் மண்டைக்காடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், பின்னர் போலீசார் வந்து சம்பவ இடம் வந்து விசாரித்த போது செல்போனில் பேசிக்கொண்டிருந்த நபர் மண்டைக்காடு பருத்திவிளையை சேர்ந்த வினுமோன் என்றும், அவருடைய கழுத்தில் கிடந்த 3 1/2 பவுன் தங்க செயினை அறுத்து சென்று விட்டதாகவும், அதன் பிறகு அந்த குற்ற வழக்கில் சம்பந்தப்பட்ட நபர்களை மண்டைக்காடு காவல் நிலையத்தார் பிடித்து வைத்ததாகவும், பயன்படுத்திய வாகனங்களை என்னிடம் அறிமுகம் படுத்தியதாகவும், இந்த குற்ற செயலில் ஈடுபட்ட நபர்கள் எதிரிகளாக குறிப்பிடப்பட்ட நபர்கள் தான் என்றும், அடையாளம் காட்டிவிட்டு தற்சமயம் எதிரிகள் பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள் என்பதால், ஊர் பெரியோர்களின் சமாதானத்தை ஏற்று உங்களுக்கு எந்த பாதிப்பும் இல்லாத நிலையில், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், இல்லை.

மறு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**